# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண். 44

## 2008, நவம்பர் 14, வெள்ளிக்கிழமை

## திருவள்ளுவர் ஆண்டு - 2039, ஐப்பசி 29

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:—

**" இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்**
**நடைதெரிந்த நன்மை யவர் "**

( சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும். )

### 1. தகவல் கோரல்

**(1)** இலங்கை அதிபர் இலங்கையில் போர் நிறுத்தம் செய்யபோவதில்லையென புதுதில்லியில் அறிவித்துள்ளது குறித்து திருவாளர்கள் ஜி.கே. மணி, கரி. இராமசாமி, வை. சிவபுண்ணியம், மு. கண்ணப்பன், து. ரவிக்குமார், சி. ஞானசேகரன், கே. மகேந்திரன் மற்றும் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் அரசிடம் தகவல் கோரினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

**(2)** மதுரையில் அரசு போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படும் தாழ்தள பேருந்தில் வசூலிக்கும் கட்டணம் விருதுநகர், திருச்சி ஆகிய இடங்களில் வசூலிக்கும் கட்டணத்தை விட அதிகமாக உள்ளது குறித்து திரு. என். நன்மாறன் அவர்கள் அரசிடம் தகவல் கோரினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

**(3)** செங்கல்பட்டு, வால்பாறை ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதினால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து, திருவாளர்கள் கி. ஆறுமுகம், கோவை தங்கம் மற்றும் சி. சண்முகவேலு ஆகியோர் அரசிடம் தகவல் கோரினார்கள்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

**(4)** கூட்டுறவு சங்கங்களில் காப்பீடு தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படாதது குறித்து திரு. கரி. இராமசாமி அவர்கள் அரசிடம் தகவல் கோரினார்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

**(5)** சென்னையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மேம்பாடு நிதியினை செலவழிக்க இயலாத நிலை குறித்து திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் அரசிடம் தகவல் கோரினார்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் அளித்தார்.

### 2. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

#### (1) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. கி. ஆறுமுகம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள், 2008-2009-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் நூற்று ஐந்தாவது முதல் நூற்று பதினொன்றாவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

..2

**(2) மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்**

திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள், 2008-2009-ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் ஐம்பத்து ஐந்தாவது முதல் அறுபதாவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் ( அறிமுகம் செய்தல் )**

(1) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(2) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**(3) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(4) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

4. 2008-2009—ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை

2008-2009—ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் பதிலுரையும் மற்றும் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு:—

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர் :—

2. திரு. சி. ஞானசேகரன் ( விவாதம் தொடர்ச்சி.... )
3. திரு. கே.ஏ. செங்கோட்டையன்
4. திரு. குத்தாலம் க. அன்பழகன்
5. திரு. ஜி.கே. மணி
6. திரு. என். நன்மாறன்
7. திரு. சு. குணசேகரன்

( விவாதம் தொடர்ச்சி.... )

8. திரு. ஆர். ஞானதாஸ்

9. திரு. து. ரவிக்குமார்

10. திரு. ஓ. பன்னீர்செல்வம் ( எதிர்க்கட்சித் துணைத் தலைவர் )

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளித்தார்.

12.11.2008 அன்று உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன அல்லது திரும்பப் பெறப்பட்டதாக கருதப்பட்டன. 12.11.2008–ஆம் நாளிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள 2008-2009–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறித்த மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைகள் குறித்து 12.11.2008 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கோரப்பட்ட தொகைகள் குறித்த தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது. கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் ( அறிமுகம் செய்தல் )

அறிவிப்பு

2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.3) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினை தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.3) சட்டமுன்வடிவு

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

## 6. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு நிதி அமைச்சர் (பேரவை முன்னவர்) அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களை முன்மொழிந்தார் :–

" சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 67/2008); 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 63/2008); 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.64/2008); 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.65/2008) மற்றும் 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.66/2008) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.67/2008)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய அனுமதி கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

2008–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண்.49/2008) சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினை தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**(2) 2008–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.49/2008)**

திரு. எல். ரவிச்சந்திரன் அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:–

" 18.07.2008–ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2008–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்.2/2008) இப்பேரவை நிராகரிக்கின்றது "

மேற்காணும் தீர்மானத்தை திரு. எல். ரவிச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்தார்; திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் வழிமொழிந்தார்.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய அனுமதி கோரினார்.

மேற்படி சட்டமுன்முடிவு மீதான விவாதத்தில் திருவாளர்கள் எல். ரவிச்சந்திரன், தி. வேல்முருகன், கே. மகேந்திரன், போளூர் ம. வரதன், ஜி.கே. மணி மற்றும் தி. இராமசாமி ஆகியோர் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களால் முன்மொழிப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 13 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

------

2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினை தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**(3) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.50/2008 )**

---

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(4) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.57/2008 )**

---

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் திருவாளர்கள் சி.வி. சண்முகம், எச். அப்துல் பாசித், திருமதி. ரா. லீமா றோஸ், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. து. ரவிக்குமார் ஆகியோர் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

..6

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளித்தார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 8 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(5) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு**
**( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.51/2008 )**

---

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளித்தார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(6) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு**
**( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.58/2008 )**

---

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(7) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 60/2008)

திரு. பி.கே. சேகர் பாபு அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:—

"28.10.2008—ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2008—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்.10/2008) இப்பேரவை நிராகரிக்கின்றது "

மேற்காணும் தீர்மானத்தை திரு. எல். ரவிச்சந்திரன் அவர்கள் வழிமொழிந்தார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் திருவாளர்கள் பி.கே. சேகர்பாபு, சி. ஞானசேகரன் மற்றும் ஜி.கே. மணி ஆகியோர் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

திரு. பி.கே. சேகர் பாபு அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(8) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 60/2008)

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

..8

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(9) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 63/2008)**

திரு. எல். ரவிச்சந்திரன் அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:–

"04.08.2008—ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2008—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்.5/2008) இப்பேரவை நிராகரிக்கின்றது "

மேற்காணும் தீர்மானத்தை திரு. சு.ப. வேலுமணி அவர்கள் வழிமொழிந்தார்.

மேற்படி சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் திருவாளர்கள் செ.ம. வேலுசாமி, விடியல் எஸ். சேகர், கி. ஆறுமுகம், கே. மகேந்திரன் மற்றும் எஸ். இராசசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்.

திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(10) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் ( மூன்றாம் திருத்தச் ) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 64/2008 )

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(11) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் ( நான்காம் திருத்தச் ) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 65/2008 )

---

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(12) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 52/2008 )

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(13) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயத்) திருத்தச் சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 59/2008 )

---

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று கோரினார்.

செல்வி கே. பாலபாரதி அவர்கள் இச்சட்டமுன்வடிவை எதிர்ப்பதாக தெரிவித்தார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(14) 2008-ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 53/2008 )

---

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று கோரினார்.

மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(15) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.54/2008 )

---

மேற்படி அவசர சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம் குறித்து அறிவிப்பு கொடுத்துள்ள அ.இ.அ.தி.மு.க. கொடுத்திருந்த அவசரச்சட்டத்தினை நிராகரிக்கும் அறிவிப்பினை எவரும் முன்மொழியாததால் இவ்முன்னறிவிப்பு திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

திருவாளர்கள் ஜி.கே. மணி, கே. மகேந்திரன், சி. ஞானசேகரன் மற்றும் வை. சிவபுண்ணியம் ஆகியோர் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.66/2008 ) சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினை தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

(16) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.66/2008 )

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரு. ஜி.கே. மணி அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(17) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.55/2008 )

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

..12

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(18) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு
( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.56/2008 )

---

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

(19) 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனைவரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு
( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.62/2008 )

---

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 16 வரை திருத்தங்கள் இல்லை. பிரிவுகள் 2 முதல் 16 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

அறிவிப்பு

திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு – சிண்டிகேட் அலுவல் சாரா உறுப்பினராக பணியாற்றுவதற்கு திரு. என். மாலைராஜா, சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து முறையாக வேட்புமனு வரப்பெற்றுள்ளது. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புமனுவின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்புமனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. என். மாலைராஜா அவர்கள், அந்தப் பதவிக்கு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாவும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக்காலம் 13.11.2011 வரையாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின்–சிண்டிகேட் உறுப்பினர் பதவியும் முடிவடையும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**11. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்**

சட்டமன்றப் பேரவை விதி 25(1) இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை நிகழ்ச்சி பிற்பகல் **02.59** மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

**மா. செல்வராஜ்.**
**செயலாளர்.**

நாஅ/–